Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 123 | thalaivaasaltv@gmail.com | வெள்ளிக்கிழமை பெப்ரவரி 12, 2021
தற்போது இணையத்திலும் தலைவாசல் www.thalaivaasal.news

## அச்சுவேலி மரக்கறிச் சந்தை வியாபாரிகள் நால்வருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம் அச்சுவேலி மரக்கறிச் சந்தையில் எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் வியாபாரிகள் நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவருடைய தகவலின் படி,

யாழ்ப்பாணத்தில் நேற்று அடையாளம் காணப்பட்ட மினிபஸ் நடத்துனரின் மனைவி மற்றும் பிள்ளை ஆகியோருக்கு இன்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை,

யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் வடக்கு மாகாணத்தினைச் சேர்ந்த 15 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில்

யாழ். மாவட்டத்தினைச் சேர்ந்த ஆறு பேர், மன்னார் மாவட்டத்தினைச் சேர்ந்த ஐவர், முல்லைத்தீவு மாவட்டத்தினைச் சேர்ந்த நால்வர் ஆகியோருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## தமிழர்களை கனவு காணவேண்டாம் என்கிறார் காணி அமைச்சர்



"இலங்கையின் தேசிய பிரச்சினைகளுக்கு அரசுதான் தீர்வுகளை வழங்கும். அதைவிடுத்து சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் என்று வடக்கு, கிழக்கு தமிழ் மக்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கனவு காணக் கூடாது."

இவ்வாறு காணி விவகார அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார். 03



## ஐ.பி.எல் ஏலப் பட்டியலில் யாழ் வீரர் வியாஸ்காந்த்

2021ம் ஆண்டுக்கான ஐ.பி.எல் தொடர் ஏப்ரல் முதல் மே மாதம் வரை இடம்பெறவுள்ளது.

ஐபிஎல் கிரிக்கெட் தொடருக்காக வீரர்களை எடுப்பதற்கு ஏலம் இடம்பெற இருக்கிறது.

இதேவேளை வீரர்களுக்கான ஏலம் எதிர்வரும் 18ம் திகதி சென்னையில் இடம்பெறவுள்ளது. 03

## தமிழ்த்தேசியத்திற்கு எதிராக பள்ளிவாசல்களில் துண்டுப்பிரசுரம் விநியோகம்

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டம் தொடர்பில் மட்டக்களப்பு மாவட்டத்தின் முஸ்லிம் பகுதிகளில் அமைந்துள்ள,

பள்ளிவாசல்களின் ஊடாக இஸ்லாமிய ஒற்றுமை அமைப்பின் பிரச்சார பிரிவு எனும் அமைப்பினால் துண்டுப்பிரசுரங்கள் விநியாகம் செய்யப்பட்டுள்ளது, குறித்த பிரசுரத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது. 03

## கொச்சிக்கடை தேவாலயத்துக்கு மொட்டைக் கடிதம் புலனாய்வுப் பிரிவு பல கோணங்களில் விசாரணை!

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் போன்று இலங்கையில் மீண்டும் தாக்குதல் இடம்பெறலாம் என்கின்ற மொட்டைக் கடிதம் காரணமாக புலனாய்வுப் பிரிவினர் பல கோணங்களில் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த கடிதம் அண்மையில் கொழும்பு - கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்துக்குக் கிடைத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலை, மத வழிபட்டுதலம் ஆகிய பகுதிகளுக்கு தாக்குதல் நடத்தப்படலாம் என்று குறித்த கடிதத்தில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. 03

## முற்போக்குக் கூட்டணிக்குள் முறுகல்!

மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குள் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது என நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி, பழனி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய முன்னணி, இராதா கிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி ஆகியன கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன.

மலையகத்தில் உதயமான கூட்டணிகளுள் நான்கு வருடங்களுக்கு மேல் தாக்குப் 03

## யாழ். பல்கலைக் கழக பி.சி.ஆர். பரிசோதனையில் பாகுபாடு! அச்சத்தில் மாணவர்கள்

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பிசிஆர் பரிசோதனைகளில் பாகுபாடு காணப்படுவதாக மாணவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கலைப்பீட நான்காம் வருட பருவகால பரீட்சைகள் இடம்பெற இருக்கும் நிலையில், பரீட்சைக்கு தோற்றும் வெளி மாவட்ட மாணவர்களிடம் இருந்து மாதிரிகள் பெறப்பட்டு பெறுபேறுகள் வெளியாகின. 03

## சுதந்திர தின கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட 50 பேருக்கு கொரோனா!

அண்மையில் கொழும்பில் நடந்த சுதந்திர தின கொண்டாட்டத்தில் கலந்துகொண்டிருந்த சிவில் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த 50 பேர் கோவிட் வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளதாக சிவில் பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

சுதந்திர தின கொண்டாட்டங்களில் கலந்து கொண்ட பின்னர், அம்பாறையில் உள்ள தனிமைப்படுத்தப்பட்ட முகாம்களில் இவர்கள் தங்கவைக்கப்பட்டு இருந்தனர்.

இதற்கிடையில், சுதந்திர தின கொண்டாட்டங்களில் கலந்து கொண்டிருந்த கதிர்காம பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து அதிகாரியும் கோவிட் வைரஸால் 03

NLite
MAKE YOU SHINE
வடக்கின் தொழில்துறையின் சிகரம்!
வல்லை காமென்ஸ்!!
உடுப்பிட்டி வீதி, வல்லை, யாழ்ப்பாணம்.
தனது புதிய தொழில் பயணத்தை தொடங்குகின்றது.
தேவைகளிற்கு அழையுங்கள்
021 321 5611
0776688555
0776686600
வடக்கு மக்களின் நன்மதிப்பை பெற்ற வல்லை காமென்ஸில் மேம்படுத்தப்பட்ட வசதி வாய்ப்புக்களுடன்
உங்கள் வீடு தேடி வரும் வசதிகளுடன் தைத்த ஆடைகள் தயாராகின்றன.
ரீசேட் வகைகள்,மகளிர் மற்றும் சிறுவர் தைத்த ஆடைகளது உற்பத்தி மையம்
Face book: Ceylon Spinning & Textiles Mills Ltd – Nlite
Ceylon Spinning & Textiles Mills Ltd – Nlite

## பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை:
# சர்ச்சைகள் குறித்து வெளிப்படுத்தினார் சுமந்திரன்!



பல்லாயிரக்கணக்கான மக்களின் பேராதரவுடன் நடைபெற்று முடிந்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டம் குறித்து முன்வைக்கப்படும் பல்வேறு சர்ச்சைக்குரிய கருத்துக்கள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் விளக்கமளித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே இதுகுறித்து அவர் விளக்கமளித்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், “பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியினை ஏற்பாடு செய்யும் போது எங்களிடம் 10 விடயங்களை சுட்டிக்காட்டி, இதனை வலியுறுத்தியே பேரணியினை முன்னெடுக்கப் போவதாக தெரிவித்தனர்.

இவ்வாறான நிலையில் ஐந்து நாட்கள் தொடர்ந்தும் பேரணியினை முன்னெடுத்து சென்று, ஐந்தாவது நாளில் புதிதாக விடயங்களை பிரகடனமாக தெரிவிப்பது என்பது மக்களுக்கு நேர்மையாக நடந்து கொள்ளுகின்ற ஒரு விடயம் அல்ல.

பிரகடனம் என்று சொல்லி படிக்கப்பட்டதிலே நல்ல விடயங்களும் இருக்கலாம் அதைபற்றி நான் பேசவில்லை. அது தமிழ் மக்களுக்கு உரிய விடயங்களாக இருக்கலாம் இல்லாமல் இருக்கலாம் அதை பற்றி நான் பேசவில்லை.

ஆனால் இந்த பத்து விடயங்கள் குறித்து சொல்லி வாருங்கள் என அழைத்து விட்டு, மக்களும் சேர்ந்து நடந்த பின்னர் வேறு விடயங்களை இதுதான் பிரகடனம் என சொல்லுவது முழுக்க முழுக்க மக்களை ஏமாற்றுகின்ற ஒரு செயல்.

நான் துரோகம் என்ற சொல்லை ஒருபோதும் பயன்படுத்துவது இல்லை. நான் மக்களை ஏமாற்றுகின்ற செயல் என்று சொல்லுகின்றேன். இந்த துரோகம் என்ற சொல்லும், இன்னுமொருவர் சொல்லியிருந்தார் சுமந்திரன் இந்த போராட்டத்தினை காட்டிக்கொடுத்து விட்டார் என்று.

காட்டிக்கொடுப்பு, துரோகம் என்கின்ற சொற்கள் தமிழ் அரசியலில் கனதிநிறைந்த சொற்கள் அதற்கு பல அர்த்தங்கள் உள்ளன. எவரையாவது தீர்த்துக் கட்ட வேண்டுமாக இருந்தால் முதலில் அவருக்கு துரோகி பட்டம் கொடுப்பார்கள். அது அண்மைக்காலமாக இல்லாமல் இருந்தது. எனக்கும் பல தடவைகள் அந்த பட்டம் வழங்கப்பட்டது.

இந்தநிலையில் எனக்கு வழங்கப்பட்ட விசேட பாதுகாப்பு நீக்கப்படுகின்ற தருவாயில், திரும்பவும் காட்டிக்கொடுப்பு, துரோகம் என்கின்ற சொற்கள் பயன்படுத்தப்படுவது ஒன்றோடு ஒன்று தொடர்பில்லாமல் செய்யப்படுவதாக நான் நினைக்கவில்லை. ஆகவே சரத் வீரசேகரவிற்கும் இந்த சொற்களை பயன்படுத்துபவர்களுக்கும் நிறையவே தொடர்பு இருப்பதாக நான் சந்தேகிக்கின்றேன்.

அத்துடன், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியின் ஆரம்பத்தில் நான் வரவேண்டும் என வலியுறுத்திக்கேட்டுக் கொண்டார்கள். ஏற்பாட்டார்கள் சாணக்கியனுடன் பேசும் போதெல்லாம் இதனை வலியுறுத்தினர்.

இதன்காரணமாக நான் மூன்று முக்கிய வழக்குகளை வாதாடும் பொறுப்பினை சயந்தனிடம் ஒப்படைத்து விட்டு சென்றேன். நான் செல்லுவம் வரை அனைவரும் வாகனங்களில் இருந்து இறங்காமல் எனக்காக காத்திருந்தார்கள்.

இரண்டாவது, மூன்றாவது நாட்களில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னிற்கு செல்லதாக கூறுபவர்கள், முதல் நாளில் நாங்கள் முன்னிற்கு சென்றமை குறித்து எதுவும் பேசவில்லை.

முதல் நாளில் தடைகளை உடைக்க தேவைப் பட்டவர்கள் பின்னர் அவர்களுக்கு தேவைப் படவில்லை“ என அவர் இதன்போது கவலை வெளியிட்டுள்ளார்.

# முஸ்லிம் சட்டங்களை மட்டுமே குறிவைக்க முடியாது



முஸ்லிம் சட்டங்களை மட்டுமே குறிவைக்க முடியாது என்றும் ஒரு சட்டம் அல்லது கொள்கையை கண்டிப்பாக அமுல்படுத்த வேண்டுமானால் இலங்கையில் ஏனைய மதங்கள் பின்பற்றும் சட்டங்களும் இரத்து செய்யப்பட வேண்டும் என்று நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஒரு நாடு - ஒரு சட்டம் என்ற கொள்கையில் பயணிக்கும் இலங்கையில், காதி நீதிமன்றங்கள் தொடர்பாக அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், அத்துரலிய ரத்தன தேரர் எழுப்பிய கேள்விக்கு இன்று (வெள்ளிக்கிழமை) நாடாளுமன்றில் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் கண்டியன் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம், யாழ்ப்பாணம் தேசவழமைச் சட்டம், முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் போன்ற பல தனியார் மத சட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

அவ்வாறு இருக்கும்போது, ஒரே ஒரு மதச் சட்டத்தை மட்டுமே அகற்ற முடியாது என்று சுட்டிக்காட்டிய நீதி அமைச்சர், கலந்துரையாடல்களுக்குப் பிறகு அதைத் திருத்த முடியும். அல்லது இலங்கையில் உள்ள அனைத்து தனியார் மதச் சட்டங்களும் ஒன்றாக ஒழிக்கப்பட வேண்டும் என தெரிவித்தார்.

முஸ்லிம் பெண்கள் தங்கள் அனுமதியின்றி திருமணம் செய்து கொள்ளவில்லை என்றும் அவர்களின் ஒப்புதலுடன் அவ்வாறு செய்யப்படுகிறார்கள் என தெரிவித்த அமைச்சர், அதே நேரத்தில் அவர்களின் தந்தையர்கள் அவர்கள் சார்பாக குழந்தையின் சம்மதத்தை உறுதி செய்த பின்னரே திருமண ஆவணத்தில் கையெழுத்திட அனுமதிக்கப்படுகிறார்கள் எனவும் சுட்டிக் காட்டினார்.

தற்போதுள்ள இந்த நடைமுறையில் திருத்தம் செய்ய வேண்டுமென்றால், சம்பந்தப்பட்ட கட்சிகளுடனான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து இதைச் செய்ய முடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கண்டியன் சட்டத்தின்படி திருமணத்திற்கான குறைந்தபட்ச வயது 16 என்றும், அதேபோல முஸ்லிம் சட்டத்தில் குழந்தையின் சம்மதத்துடன் 12 வயதுக்கு மேல் திருமணம் செய்ய முடியும் என்றும் நீதி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், இது தொடர்பாக முஸ்லிம் சட்டத்தில் திருத்தங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும், திருமணத்திற்கான குறைந்தபட்ச வயதை 18 ஆக திருத்தி 2002ல் சவுதி அரேபியாவில் பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவைப் பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

அத்தோடு, முஸ்லிம் பெண்களின் திருமணத்திற்கான குறைந்தபட்ச வயதை 18 ஆக திருத்துவதற்கு 2020 நவம்பரில் அமைச்சரவை முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டதாகவும் நீதி அமைச்சர் கூறினார்.

குழந்தை தனது சொந்த திருமண ஆவணத்தில் கையெழுத்திட அனுமதிக்க பரிந்துரைகளும் செய்யப்பட்டுள்ளன என்று கூறிய அமைச்சர் சப்ரி, இது தொடர்பாக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சட்டத்தில் திருத்தம் செய்ய முஸ்லிம் சமூகத்துடன் இணைந்து செயற்பட்டு வருவதாகவும் கூறினார்.

முஸ்லிம் சட்டம் எதிர்காலத்தில் தேவைக்கேற்ப திருத்தப்படும் என்று தான் நம்புவதாக அவர் மேலும் உறுதியளித்தார்.

# கல்முனை சட்டத்தரணிகள் சங்க புதிய தலைவராக றமீஸ்



கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக மருதமுனை பிரதேசத்தைச் சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணி ஐ.எல்.எம். றமீஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் 2021ஃ2022 ஆண்டுக்கான புதிய நிர்வாக சபையை தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் கல்முனை நீதவான் நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் கடந்த வியாழக்கிழமை (11) நடைபெற்றது.

இதன்போது, கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக மருதமுனை பிரதேசத்தைச் சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணி ஐ.எல்.எம். றமீஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

அத்துடன் செயலாளராக ஆரிக்கா காரியப்பரும் பொருளாளராக எம்.ஜே. ஜவாட் நிஷாத் உட்பட 23 நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

கல்முனை பிரதேசத்தை மையப்படுத்தி எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டன.

# பிரித்தானியாவில் பரவிய புது வைரஸ்
# இலங்கையின் பல பாகங்களில் பரவல்

பிரித்தானியாவில் இனங்காணப்பட்ட டீ.1.1.7 என்ற புதிய வகை கொரோனா வைரஸ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இனங்காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி கொழும்பு, அவிஸ்ஸாவெல்ல, பியகம மற்றும் வவுனியாவில் இருந்து இனங்காணப்பட்ட தொற்றாளர்களுக்கு இவ்வாறு புதிய வகை வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவை மிக வேகமாக பரவுக்கூடும் என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மரபணு உயிரியல் நிறுவனத்தின் பணிப்பளார் வைத்தியர் சந்திம ஜீவர்தன தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவில் இனங்காணப்பட்ட புதிய கொரோனா வைரஸ், தற்போதுவரை 50 நாடுகளில் பரவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வைரஸால், நோயாளர்களின் எண்ணிக்கையும் கணிசமான அளவு அதிகரிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.



புதிய வைரஸ், உலகம் முழுவதும் புதிய கொரோனா அலையை ஏற்படுத்தும் அபாயம் உள்ளதாக பிரித்தானிய வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் நாள்தோறும் 800க்கும் மேற்பட்ட கொரோனா நோயாளர்கள் பதிவாகியுள்ள நிலையில், அதிக ஆபத்துள்ள பகுதிகளாக அவை அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதேபோன்று கடந்த சில வாரங்களாக ஒரு நாளைக்கு 50க்கும் மேற்பட்ட கொரோனா நோயாளர்கள் பதிவாகின்ற நிலையில், வவுனியா மாவட்டம் ஒரு இடைநிலை ஆபத்துள்ள பகுதி எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

# யாழ்.-கொழும்பு குளிரூட்டி ரயிலில் புது வகுப்புகள் இணைப்பு



யாழ்ப்பாணம் - கொழும்பு இடையே குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி சேவையில் ஈடுபடும் தொடருந்தில் புதிய வகுப்புகள் இணைக்கப்பட்ட சேவை கொழும்பிலிருந்து புறப்பட்டு இன்று பிற்பகல் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

இந்த சேவை தினமும் இடம்பெறும் என்று யாழ்ப்பாணம் ரயில் நிலைய பிரதான அதிபர் தி. பிரதீபன் தெரிவித்தார்.

கல்கிசையிலிருந்து தினமும் அதிகாலை 5.10 மணிக்கு புறப்படும் குளிரூட்டப்பட்ட நகர்சேர் தொடருந்து சேவை புறக்கோட்டையில் அதிகாலை 5.30 மணிக்கு புறப்பட்டு நண்பகல் 12.30 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 1.15 மணிக்கு புறப்படும் தொடருந்து யாழ்ப்பாணம் பிரதான ரயில் நிலையத்திலிருந்து பிற்பகல் 1.37 மணிக்கு கொழும்பு புறப்படும்.

இந்த சேவையில் இதுவரை குளிரூட்டப்பட்ட வகுப்புகளே காணப்பட்டன. எனினும் இன்று முதல் இந்த சேவையில் இரண்டாம் வகுப்பில் 2 பெட்டிகளும் மற்றும் மூன்றாம் வகுப்பில் ஒரு பெட்டியுமாக 3 மேலதிக பெட்டிகள் இணைக்கப்பட்டு 7 பெட்டிகளில் பயணிகள் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

குளிரூட்டப்பட்ட முதலாம் வகுப்புக்கு ஆயிரத்து 700 ரூபாயும் இரண்டாம் வகுப்புக்கு 1,000 ரூபாயும் மூன்றாம் வகுப்புக்கு 700 ரூபாயும் கட்டணம் அறவிப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நல்லூரில் குடைசாய்ந்த தனியார் வாகனம்!

யாழ்ப்பாணம் - நல்லூர் பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு சொந்தமான வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

நல்லூர் ஆலயத்திற்கு பின் பகுதியில் பருத்தித்துறை வீதிக்கு அருகில் மின் கம்பங்களை தூக்கும் போது வாகனம் குடைசாய்ந்து இந்த விபத்து இம்பெற்றுள்ளது.

விபத்தில் பணியாளர்கள் எவருக்கும் எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தமிழ்த் தேசியத்தை...

கடந்த சில நாட்களாக சாணக்கியன் என்றும் அவர் முஸ்லிம்களுக்காக குரல் கொடுக்கிறார் என்றும் எம்மில் பலர் பலவாறும் புகழ்ந்து கெண்டிருந்தோம்

ஆனால் கடந்த 6ஆம் திகதி சாணக்கியனின் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை என்ற பேரணியில் தனது பசுத்தோலை கழட்டி வைத்து விட்டு சுமந்திரனுடன் இணைந்து புலியாக புறப்பட்ட போதுதான் அவர்களது நோக்கத்தை முஸ்லிம்களாகிய நாம் சரிவரக்கண்டு கொண்டோம்.

முப்பது வருட கொடூர யுத்தம் அவ் யுத்தத்தில் புலிகளோடு நின்றவர்களையே நஞ்சூட்டி கொன்றது கசப்பான வரலாறு,

அத்தோடு உடுத்த உடையுடன் எம்மை துரத்தி அடித்து தொழுகையில் வைத்து நம்மை கொன்று குவித்து ,

பள்ளிகொடல்லவில் எம் தாய்மாரின் வயிற்றை கிழித்து சிசுவை மரத்தில் அடித்து படுகொலை செய்த கொடூரர்களின் அடி வருடிகளான இவர்கள் மீண்டும் தனி நாடு கோரும் படலத்தை ஆரம்பித்தனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அத்துண்டு பிரசுரத்தில் " அவர்கள் தங்கள் சூழ்ச்சிகளை செய்து கொண்டே இருந்தனர். அவர்களுடைய சூழ்ச்சிகள் மலைகளைப் பெயர்த்து விடக் கூடியவைகளாக இருந்த போதிலும்,

அவர்களின் சூழ்ச்சிக்கு உரிய தண்டனை அல்லாஹ்விடம் இருக்கிறது எனும் அல்குர்ஆனின் 14அத்தியாயத்தின் 46ஆவது வசனத்தை மேற்கோள் காட்டியதை தொடர்ந்து,

இறைவன் இவ்வாறு கூறி இருக்க நாம் தமிழ் தேசியம் பேசும் குழுக்களின் சதி வலைக்குள் சிக்குவது நியாயமா? இதில் எம்மவர்கள் சிலரும் கலந்து கொண்டது வேதனைக்குரிய விடயம்.

ஏன் எதற்காக என அறியாத இளைஞர்களை பலிக்கடாக்களாக களத்தில் இறக்க எந்த பெற்றோர்கள் தான் விரும்புவர்? என கேள்வி எழுப்பியுள்ளதுடன்,

புலிகளால் கொலையுண்ட எமது மக்களின் சடலத்தின் மேல் மீண்டும் ஒரு முறை பயணிக்க எவர் விரும்புவர்? ஆனால் இங்கு நடந்தது என்ன ? அவர்களின் நோக்கத்திற்காக எம் முஸ்லிம்களின் பலவீனத்தை பயன்படுத்திக் கொண்டார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால் எமது முஸ்லிம் சமூக தலைவர்கள் என்போர் எம்மை கொன்று குவித்த புலிகளை விடுதலை செய்யுமாறு கோஷமிட்ட சம்பவமே ஆகும்,

இனியும் நம்மவர்கள் அவர்களின் பேச்சை நம்புபவதன் ஊடாக எமக்கு கிடைப்பது என்ன? அவப்பெயரே அன்றி வேறு எதுவுமில்லை.

நம்மவர் இனியேனும் சிந்தித்து செயற்படா விட்டால் எமது முஸ்லிம் சமூகத்திற்கு பாரியதொரு துரோகத்தை செய்தவர்களாக நாம் ஆகி விடுவோம் என்பதே உண்மை என குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த துண்டுப்பிரசுரமானது இன்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களில் ஜு/ம்ஆ தொழுகையை தொடர்ந்து விநியோகம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர்களை...

“சர்வதேச அரங்கில் அரசைப் பலவீனப்படுத்தவே பொத்துவில் தொடக்கம் - பொலிகண்டி வரையிலான பேரணியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் வடக்கு, கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் முன்னெடுத்துள்ளனர்” எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், இவ்வாறான பேரணியால் அரசை ஒருபோதும் பலவீனப்படுத்த முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை எனவும்,

இதுவரையில் குற்றச்சாட்டுக்கள் எவையும் ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் இலங்கை விவகாரத்தில் ஒருதலைப்பட்சமாகவே செயற்படுகின்றார் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அடிப்படை கொள்கைக்கு முரணானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால், இம்முறை இலங்கைக்கு ஆதரவாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் பலம் கொண்ட நாடுகள் செயற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முற்போக்கு...

பிடித்து நின்ற கூட்டணி என்ற பெருமை தமிழ் முற்போக்குக் கூட்டணியையே சாரும். அவ்வாறானதொரு கூட்டணிக்குள்தான் தற்போது முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு மலையக மக்கள் முன்னணியின் செயற்பாடே காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த அ.அரவிந்குமார் எம்.பியை, தமிழ் முற்போக்குக் கூட்டணியிலிருந்து இடைநிறுத்திய நிர்வாகக்குழு, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை மலையக மக்கள் முன்னணியிடம் ஒப்படைத்தது.

எனினும், மலையக மக்கள் முன்னணி இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக அரவிந்குமாரை கட்சியில் தக்கவைத்துக்கொள்வதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்ல சம்பள உயர்வு போராட்டத்துக்கான ஆதரவையும் மலையக மக்கள் முன்னணி தன்னிச்சையாக வெளியிட்டதால் இதர இரு பங்காளிகளும் அக்கட்சி மீது அதிருப்தியில் இருக்கின்றன. இந்நிலையில், அடுத்துவரும் தேர்தல்களில் மலையக மக்கள் முன்னணி இல்லாமல்தான் போட்டியிட வேண்டும் எனத் தொழிலாளர் தேசிய சங்க உறுப்பினர்கள் வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர். இவ்விடயம் உட்பட மேலும் சில காரணங்களாலேயே சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

## யாழ். பல்கலைக்கழக...

இதன்படி இரு மாணவர்களுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது.

சிறீலங்காவில் பல பாகங்களிலும் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வரும் நிலையில், யாழ் குடாநாட்டிலும் அதிகளவு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

இருப்பினும் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பிசிஆர் பரிசோதனைகளில் யாழ். மாவட்ட மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் பிசிஆர் பரிசோதனை மேற்கொண்ட ஏனைய மாணவர்கள் அதிருப்தி அடைந்துள்ளதுடன், அனைத்து மாணவர்களுக்கும் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டுமமென கோரிக்கை விடுத்துள்ளதுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மாணவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் தினமும் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வரும் நிலையில் - தீவக பகுதியைச் சேர்ந்த ஒருவர் கடந்த வாரம் உயிரிழந்தார். அத்துடன் நேற்றையதினம் தனியார் பேருந்து சேவையின் நடத்துனர் ஒருவர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.பி.எல்...

இந்த ஏல பட்டியலில் 292 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். ஆரம்பத்தில் 1114 வீரர்கள் பதிவு செய்திருந்த நிலையில் தற்போது இறுதி பட்டியல் வெளியாகியுள்ளது.

இதில் 31 இலங்கை வீரர்களில் ஒன்பது பேரின் பெயர் ஏல பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண மத்திய கல்லூரி மாணவர் விஜயகாந்த் வியாஸ்காந்த் பெயரும் இடம்பெற்றுள்ளது.

19 வயதான விஜயாகாந்த் வியஸ்காந்த் கடந்த ஆண்டு இடம்பெற்ற லங்கா பிரீமியர் லீக் தொடரில் யாழ்ப்பாணம் ஸ்டாலியன்ஸ் அணிக்காக விளையாடியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சுதந்திர தின...

பாதிக்கப்பட்டுள்ளார்..

நிகழ்வுக்கு முன்பு எடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவர் கொரோனாவால் பாதிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தினார்.

ஆனால் நிகழ்வுக்கு பிறகு எடுக்கப்பட்ட பி.சி.ஆர் சோதனையில் கோவிட் தொற்று இருப்பது தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொச்சிக்கடை...

இந்தக் கடித்ததை அடுத்து கடற்கரை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் கொச்சிக்கடை தேவாலயத்தின் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

# 1000 ரூபாய் சம்பள அதிகரிப்பை ஏற்க முடியாது

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளத்தை 1000 ரூபாயாக அதிகரிக்க சம்பள நிர்ணய சபை மேற்கொண்ட தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என சிறு தோட்ட உரிமையாளர்கள் சங்கமும் தனியார் தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கமும் அறிவித்துள்ளன.

கடந்த தினம் கூடிய சம்பள நிர்ணய சபை, இறப்பர் மற்றும் தேயிலை துறைசார்ந்த பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களது அடிப்படை சம்பளத்தை 900 ரூபாயாகவும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை 100 ரூபாயாகவும் அதிகரிப்பதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியது.

இந்த நிலையில், சம்பள உயர்வு அதிகரிக்கப்படுவதானது, சிறுதோட்ட உற்பத்தியாளர்களையும் தனியார் தேயிலை தொழிற்சாலைகளை நடத்துகின்றவர்களையும் பெரிதும் பாதிக்கும் என்று குறித்த சங்கங்கள் தெரிவிக்கின்றன. எனவே இதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

அதேவேளை, சம்பள நிர்ணய சபையின் இந்த தீர்மானத்துக்கான ஆட்சேபனையை முன்வைக்கவிருப்பதாக பெருந்தோட்ட நிறுவனங்களது ஒன்றியமும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காதலர் தினத்தில் மோசடிகள் இடம்பெறலாம் அவதானம்!

காதலர் தினத்தை முன்னிட்டு மக்களை ஏமாற்றும் வகையில் பல்வேறு மோசடி நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

இதுபோன்ற மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் அலைபேசிகள் அல்லது சமூக ஊடக கணக்குகளுக்கு போலியான குறுஞ்செய்தி அனுப்பலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

"உங்கள் காதலன் அல்லது காதலி பரிசு அனுப்பியுள்ளதாகவும், அதைப் பெற பணத்தை வைப்பிலிட வேண்டும்" எனவும் மோசடியாளர்கள் கூறலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# பௌத்த உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை பிரதமரிடம் கையளிப்பு

அகில இலங்கை பௌத்த காங்கிரஸினால் பௌத்த உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் இன்று (வெள்ளிக்கிழமை) முற்பகல் கையளிக்கப்பட்டது.

2018ஆம் ஆண்டு பௌர்ணமி தினத்தில் மிஹிந்தலை புனித பூமியில் ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஆணைக்குழு நாடு முழுவதும் ஈராண்டுகளுக்கு அதிக காலம் ஆதாரங்களை திரட்டி இவ்வறிக்கையை தயாரித்துள்ளது.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் தலைவர் ஜகத் சுமதிபாலவினால் ஆணைக்குழு அறிக்கை பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த சந்தர்ப்பத்தில் பௌத்த உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பாலித பெர்னாண்டோ (ஓய்வுபெற்ற நீதிபதி) உள்ளிட்ட ஆணைக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதனுடன், நவீன பௌத்த மத வரலாறு மற்றும் பௌத்த மாநாடுகளின் நூற்றாண்டு மலரும் பிரதமருக்கு வழங்கப்பட்டது.

இலங்கையின் பாரம்பரியம் அனைவருக்கும் சொந்தமானது என சுட்டிக் காட்டிய புதிய சிஹல ராவய தேசிய அமைப்பின் பொதுச்செயலாளர் மாகல் கந்தே சுதந்த தேரர், இந்நாட்டின் தொல்பொருள் மதிப்புகளை தமிழ் மொழிக் கல்வியில் சேர்ப்பது குறித்து ஆராயுமாறு பிரதமரிடம் இதன்போது கேட்டுக் கொண்டார்.

அச்சந்தர்ப்பத்திலேயே அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தேசிய பாரம்பரியம் குறித்த அத்தியாயத்தை தமிழ் மொழிக் கல்வியில் இணைப்பது குறித்து ஆராய்ந்து அறியத்தருமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தனவிற்கு பணிப்புரை விடுத்தார்.

குறித்த நிகழ்வின்போது பௌத்த உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களான சந்திர நிமல் வாகிஸ்ட, பேராசிரியர் நிமல் சில்வா, விசேட வைத்திய நிபுணர் நரேந்திர பிந்து, பேராசிரியர் மாலனி மெதகம உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மஹியங்கனை தொழிற்சாலைகளில் பரவிய வைரஸ் மற்றும் பி.சி.ஆர் இயந்திர பழுதால் தொற்று அதிகம்



மஹியங்கனையில் இரு தொழிற்சாலைகளில் பரவிய கொரோனா தொற்று மற்றும் பி.சி.ஆர் இயந்திரங்கள் பழுதானமை காரணமாகவே அண்மைய நாட்களில் கொரோனா நோயாளர்கள் அதிகம் பதிவாகினர் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், மஹியங்கனையில் உள்ள இரண்டு தொழிற்சாலைகளின் அதிக எண்ணிக்கையிலான ஊழியர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அதேநேரம், அனுராதபுரத்தில் ஒரு இயந்திரம் உட்பட பல பி.சி.ஆர் இயந்திரங்கள் தற்போது உடைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது கொரோனாவால் பாதிக்கப்பட்ட நபர்களின் மாதிரிகளை பரிசோதிப்பதில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதன் காணரமாக பி.சி.ஆர் முடிவுகள் முடிவுகள் மொத்தமாக அறிவிக்கப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ள அவர், இதன் காரணமாகவே கடந்த சில நாட்களாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், அடுத்த சில நாட்களில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை குறையும் என்று COVID-19 தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையம் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் கொரோனாவால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்ய அனுமதிப்பது குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சமீபத்தில் நாடாளுமன்றத்தில் அறிவித்திருப்பது குறித்து COVID-19 தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்திற்கு அறிவிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

## ஞானதேரருக்கு எதிராக நடவடிக்கை

பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என ஈஸ்டர் தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக குற்றவியல் குற்றச்சாட்டுகளை சுமத்துமாறு ஆணைக்குழு பரிந்துரைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு அளுத்கம பேருவளையில் இடம்பெற்ற வன்முறைகளிற்கு காரணமாகயிருந்தார் என்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே ஞானசார தேரருக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆணைக்குழு பரிந்துரைந்துள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத மற்றும் இன ரீதியிலான குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு காரணமான நடவடிக்கைகளில் ஈடுபட உதவிய நபர்கள் மற்றும் அமைப்புகளை அடையாளம் காண்பதற்கு ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட ஆணையின் அடிப்படையிலேயே ஞானசார தேரருக்கு எதிராக ஆணைக்குழு குற்றவியல் நடவடிக்கைகளிற்கு பரிந்துரைத்துள்ளது.

எனினும் இது குறித்து தனக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை என ஞானசாரதேரர் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 220 கொரோனா தொற்றாளர்கள்

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 220 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு,மாவட்டத்தில் 3 கொரோனா மரண சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி. வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இன்றைய தினம் (வெள்ளிக்கிழமை) காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், மன்னார் மாவட்டத்தில் நேற்று (வியாழக்கிழமை) மேலும் மூன்று கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் 73 வயதுடைய வயோதிப பெண். குறித்த பெண் நீண்ட காலமாக சுகவீனம் அடைந்திருந்த நிலையில் முசலி பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் சுய தனிமைப் படுத்தப்பட்டிருந்தார். குறித்த வயோதிப பெண்ணின் நெருங்கிய உறவினர்கள் பலருக்கு அண்மையில் கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த பெண் கடந்த புதன் கிழமை அதிகாலை திடீர் என முசலியில் உள்ள அவரது வீட்டில் மரணமடைந்தார். இவரது உடல் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு பீ.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது குறித்த பெண் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளது.

மேலும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களில் ஒருவர் மன்னாரில் உள்ள ஆடைத்தொழிற்சாலையில் கடமையாற்றுகின்றவராகவும்,மற்றையவர் மன்னார் எருக்கலம் பிட்டி கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண் ஆகவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் சேர்த்து தற்போது வரை 220 நபர்கள் மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் 9677 பீ.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் இந்த மாதத்தின் இறுதி மாதம் அல்லது மார்ச் மாதத்தின் முதல் வாரத்தில் இருந்து 30 வயது தொடக்கம் 60 வயதிற்கு உற்பட்ட சகல தொழில் மேற்கொள்பவர்களுக்கும்,60 வயதிற்கு மேற்பட்ட மக்களுக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட உள்ளது.அதற்கான நடவடிக்கைகள் மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையில் சுகாதார துறையினருக்கு ஏற்கனவே கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. தடுப்பூசி செலுத்தப்பட்ட எவருக்கும் ஒவ்வாமை அல்லது பாரதூரமான பக்க விளைவு ஏற்படவில்லை.

ஆகவே பொது மக்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் இந்த ஊசியை செலுத்துகின்ற போது அவர்கள் எவ்வித அச்சமும் இன்றி விரைவாக பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு விரைவாக பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் அவர்கள் சார்ந்த நோய்வாய்ப்பட்ட அல்லது அன்புக்கு உரிய வயோதிபர்கள் ஆகியோர் உயிரிழப்பதை தவிர்த்துக்கொள்ள முடியும். என அவர் மேலும் தெரிவித்தார்.